# தினசரி வழிபாட்டு முறை



# 13.மங்கள ஸ்தோத்திரங்கள்
## (அருணகிரிநாதர் திருப்புகழ்)

நாதபிந்து கலாதி நமோ நமோ
வேத மந்த்ர ஸ்வரூபா நமோ நமோ
ஞான பண்டித ஸ்வாமி நமோ நமோ - வெகுகோடி 1

நாம சம்பு குமாரா நமோ நமோ
போக அந்தரிபாலா நமோ நமோ
நாக பந்த மயூரா நமோ நமோ - பரசூரர் 2

சேதகண்ட வினோதா நமோ நமோ
கீத கிங்கிணி பாதா நமோ நமோ
தீரசம்ப்ரமவீரா நமோ நமோ - கிரிராஜ 3

தீபமங்கள ஜோதி நமோ நமோ
தூய அம்பல லீலா நமோ நமோ
தேவகுஞ்சரி பாகா நமோ நமோ - அருள்தாராய் 4

ஈதலும் பல கோலால பூஜையும்
ஓதலுங்குண ஆசார நீதியும்
ஈரமும் குரு சீர்பாத ஸேவையும் - மறவாத 5

ஏழ்தலம் புகழ் காவேரியால் விளை
சோழ மண்டல மீதே மனோகர
ராஜகெம்பீரா நாடாளு நாயக - வயலூர 6

ஆதரம் பயி லாரூரர் தோழமை
சேர்தல் கொண்டவரோடே முன்னாளினில்
ஆடல் வெம்பரி மீதேறி மாகயி - லையிலேகி 7

ஆதியந்த வுலாவாசு பாடிய
சேரர் கொங்குவை காவுர்நன் னாடதில்
ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் - பெருமாளே 8